REGISTERED AS A CATHOLIC WEEKLY. P.197

# பாதுகாவலன்

PATHUKAVALAN

இலங்கையின் முதல் தமிழ் கத்தோலிக்க வாரஏடு

மலர் 124 இதழ் 10 விலை ரூபா 5 15 ஆடி 1999

**பாதுகாவலன் தினம் ஞாயிறு 22 ஆவணி 99**

ஆயரின் அனுமதியுடன் 22-8-99 தினத்தை யாழ் மறைமாவட்டத்தில் பாதுகாவலன் தினமாகப் பிரகடனப்படுத்தியுள்ளோம்

UNIVERSITY OF JAFFNA LIBRARY 12 AUG 1999 PERIODICAL SECTION

# போர்த்துக்கேய ஒல்லாந்தர் கால ஈழக்கிறிஸ்தவ ஆய்வு தேவை.

★ஞா. பிலேந்திரன் அடிகளின் நூல் வெளியீட்டு விழாவில் யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை.

"கிறிஸ்தவ நாகரிகத் துறையில் ஈழத்தமிழர் வரலாறு யாழ்ப்பாண இராச்சியத்திலிருந்துதான் தொடங்குகிறது. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலத்தையும் ஆழமாக ஆராய்ந்து அக்கால நிலைமைகளை முற்கொணர வேண்டும். அந்த மொழிகளை அறிந்தோர் லிஸ்பனிலுள்ள பழைய ஆவணங்களை ஆராய்ந்து பார்த்தால் யாழ்ப்பாணத்தைப்பற்றி மேலும் பல விடயங்கள் கிடைக்கலாம்." இவ்வாறு நூல் வெளியீட்டு விழாவில் யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் கூறினார். (தொடர்ச்சி 6ஆம் பக்கம்)



இன மத பேதமின்றி அனைவருக்கும் அபயமளிக்கும் மருதமடு அன்னை

## இராணுவ நடவடிக்கை மடுப்பகுதியில் தொடங்கப்பட்டதால் யாத்திரிகளுடைய வரவு வெகுவாகக் குறைந்துள்ளது.

**–மடுப்பதி பரிபாலகர் பாதுகாவலனுக்கு பிரத்தியேக பேட்டி.**

அண்மையில் மடுப்பதியில் ஆடித் திருவிழா ஒழுங்குகளைக் கவனித்துக்கொண்டிருந்த மடுப் பரிபாலகர் எ. பி தேவசகாயம் அடிகளோடு தொடர்பு கொண்டு மடுப்பதி நிலவரம் பற்றிக் கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மடுப்பகுதியிலிருந்து இராணுவத்தினர் ஒரு மைல் தூரம் விலகிச் சென்றுள்ளனர். மடுவில் இருந்த இடம் பெயர்ந்தோர் எல்லோரும் வெளியேறி உள்ளனர், U.N.H.C.R இன் அகதி முகாம் மூடப்பட்டுள்ளது. M.S.F மருத்துவ நிலையத்தினரும் மடுப் பகுதியை விட்டு வெளியேறியுள்ளனர். இங்கு தங்கியுள்ள மிகுதியான மக்கள் இனி இடம்பெயர்ந்தோராக கருதப்பட மாட்டார்கள். மடுத் திருநாளுக்கு ஆயத்தம் செய்து கொண்டிருந்த வேளையில் சற்றும் எதிர்பாராத வகையில் இராணுவ நடவடிக்கை தொடங்கப்பட்ட படியால் யாத்திரிகர்களுடைய வரவு வெகுவாகக் குறைந்து போயுள்ளது. கொழும்புப் பகுதியில் இருந்து அனேக யாத்திரிகர்கள் வருவார்கள் என்று எதிர்பார்த்திருந்தோம். ஆனால் இராணுவ நடவடிக்கையால் மிகவும் குறைந்த எண்ணிக்கையிலேயே பக்தர்கள் வருகை தந்தார்கள். வந்திருந்த சிங்களக் குழுக்களும், பக்தர்களும் பயத்திலும், பதட்டத்திலும் இருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. திருவிழாவிற்கு தென்பகுதியிலிருந்து தங்குமிட ஒழுங்குகளைச் செய்து தரும்படி பக்தர்கள் பலர் கேட்டிருந்தார்கள். ஆனால் இந்த முறை எவருக்கும் தங்குவதற்கு வீடுகளை ஒழுங்கு செய்யக்கூடிய கால அவகாசம் இல்லாத படியால் யாருக்கும் தங்குமிட வசதியை நாம் செய்யவில்லை என்று அவர் மேலும் தெரிவித்தார்.



மடுப் பரிபாலகர்

## சுதேச குருக்கள் தினம் 25-7- 99 ஞாயிறு

எம் மத்தியில் அனேக தேவ அழைத்தல்களை உருவாக்கவும் வளர்த்தெடுக்கவும், ஆர்வத்தையும் விழிப்புணர்வையும் தூண்டுவதற்கே இத்தினம் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. பங்குத் தந்தையர்கள் விசேட கவனம் எடுத்து இத்தின வழிபாட்டை அர்த்தமுள்ளதாக்கவும்.

அருட்திரு றெஜி இராஜேஸ்வரன்
இயக்குனர்

## புதிய நியமனங்கள்

1. அருட்திரு.A. றொபின்சன் - உதவிப் பங்குத்தந்தை, மானிப்பாய்.
2. அருட்திரு.P. F. ராஜசிங்கம் - உதவிப் பங்குத்தந்தை, யாழ். பேராலயம்.

## யாழ் மறைவட்ட பொதுநிலையினர் ஆணைக்குழு

பாரிய இடப்பெயர்வு காரணமாக தனது செயற்பாடுகளைக் கைவிட்டிருந்த யாழ் மறைவட்ட பொதுநிலையினர் ஆணைக்குழு தற்பொழுது, யாழ் ஆயர் அவர்களால் மீளவும் அமைக்கப்பட்டுள்ளது. இதற்கான பொதுக்கூட்டம் ஆணைக்குழுவின் புதிய தலைவர் அருட்திரு R. H. சகாயநாயகம் அவர்கள் தலைமையில் 10.07.99 சனிக்கிழமையன்று ஆயர் இல்லத்தில் இடம்பெற்றது. யாழ் ஆயர், மூன்று மறைக்கோட்ட ஊக்குவிப்பாளராக செயற்படவிருக்கும் அருட்தந்தையர்கள் பிரான்சிஸ் (யாழ்ப்பாணம்), அருள்நேசன் (இளவாலை), யேசுரட்ணம் (பருத்தித்துறை), அருட்சகோதரிகள், மறைக்கோட்ட ரீதியாக நியமிக்கப்பட்ட பொதுநிலையினர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

அருட்சகோதரி மேசி அவர்களின் செபவழிபாட்டுடன் கூட்டம் ஆரம்பமானது. தொடர்ந்து தலைவரின் வரவேற்புரை, அங்கத்தவர்களின் அறிமுகம் இடம்பெற்றன. பின்னர் "ஆணைக்குழுவின் நோக்கமும் பொதுநிலையினரின் பணியும்" என்ற பொருளில் தலைவர் சுருக்கமான ஒரு உரையாற்றினார். அவர் வத்திக்கான் பொதுச்

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

## வாழ்த்துக்கள் !



25-07-1999 ஞாயிற்றுக்கிழமை,
புனித யாகப்பர் பெயர் கொண்ட
சுபதினத்தில், ஓய்வு பெற்ற
யாழ். ஆயர் மேதகு
வ. தியோகுப்பிள்ளை
ஆண்டகை அவர்கட்கு
காவலனின் இதயம்
நிறைந்த வாழ்த்துக்கள்!

## நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலய குண்டு வீச்சின் நான்கு ஆண்டு நிறைவு

### ஆலய முன்றலில் நினைவஞ்சலி

1995ஆம் ஆண்டு யூலை 9ஆம் திகதி முன்னேறிப்பாய்தல் இராணுவ நடவடிக்கையின் போது புக்காரா விமானம் நவாலி தேவாலயத்தின் மேல் மூன்று குண்டுகளை வீசி அங்கு அடைக்கலம் புகுந்திருந்த 165 பொதுமக்களைக் கொன்றும் 350 பேரைக் காயப்படுத்தியும் நிகழ்த்திய அனர்த்தத்தின் 4 ஆண்டு நிறைவை ஆலய முன்றலில் மக்கள் கண்ணீர் மல்க நினைவு கூர்ந்தனர்.

நவாலிப் பங்குத்தந்தை அன்ரனிப்பிள்ளையின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அருள்திரு B. F. பொணிபஸ், அருள்திரு R. H சகாயநாயகம், தென்னிந்திய திருச்சபையைச் சேர்ந்த அருள்திரு ராஜ்குமார் ஆகியோர் கலந்துகொண்டு இரங்கலுரை நிகழ்த்தினர். சமய வேறுபாடின்றி இறந்தவர்களின் உருவப் படங்கள் ஆலய முன்றலில் வைக்கப்பட்டிருந்தது.

## அருட்தந்தை மேரி பஸ்ரியன் கல்வி உதவித்திட்டம்

### ஏழு புலமைப் பரிசில்கள்

1999இல் வெளியான க.பொ.த. சாதாரண பரீட்சை முடிவுகளின் படி அதிக தகமை பெற்று க.பொ.த. உயர்தர வகுப்பிற்கு (2001 ஆவணி) தகுதிபெற்ற ஏழு மாணவர்களுக்கு புலமைப்பரிசில்கள் வழங்கப்படும்.

இவ்வுதவியில் பங்கு பெற விரும்பும் மாணவர்கள் விண்ணப்பப்படிவத்தை உங்கள் சொந்தக் கையெழுத்தில் பூர்த்தி செய்து 20-08-99க்கு முன் பங்குத்தந்தையிடம் சமர்ப்பிக்கவும். மேலதிக விபரங்கள் அடுத்த பாதுகாவலனில் வெளிவரும்.

அடுத்த பாதுகாவலன் யூலை 30ஆந் திகதி வெளியாகும்.

## கத்தோலிக்க பிரசுரங்களுக்கான அனுமதி

கத்தோலிக்க மறைக்கோட்பாடுகளையும் படிப்பினைகளையும் பாதுகாப்பது திருச்சபையின் முக்கிய கடமையாகும். எனவே கத்தோலிக்க பிரசுரங்களை வெளியிடும்போது தகுந்த ஆலோசனையும், அனுமதியும் பெற்றிருக்க வேண்டும். துண்டுப் பிரசுரங்கள், கைப்பிரதிகள், செபப் புத்தகங்கள், பாடல்கள், ஒலி, ஒளிப்பதிவு நாடாக்கள் ஆகியவற்றை வெளியிட விரும்பும்போது ஆயரின் அல்லது அவரால் நியமனம் பெற்றவரின் "NIHIL – OBSTAT" அனுமதியைப் பெற்றிருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி நிற்கின்றோம்.

யாழ் ஆயர்.

## மானிப்பாயில் மகாஞான ஒடுக்கம்

இளவாலை மறைக்கோட்டத்தின் மானிப்பாய்ப் பங்கிலும் அண்மையில் கொடியேற்றத்துடன் மகா ஞான ஒடுக்கம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. மானிப்பாய் பங்கின் அன்னம்மாள் ஆலயம், புதுமடம் கர்த்தர் கோவில், மல்வம் திருக்குடும்ப ஆலயம், உடுவில் செபமாலை மாதா ஆலயம் ஆகிய பங்குகளிலேயே ஒரே நேரத்தில் கொடியேற்றப்பட்டு சம்பிரதாய பூர்வமாக மகாஞான ஒடுக்கம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதுபற்றி பங்குத்தந்தை இயூஜின் பிரான்சிஸ் அடிகளிடம் கேட்டபோது, "மகாஞான ஒடுக்க படிவங்களை ஏற்கனவே கொடுத்துவிட்டோம். 20ம் திகதியளவில் ஞான ஒடுக்கம் ஆரம்பமாகும். இது பங்கிற்கு புத்துணர்ச்சியையும் பங்குப் பணிகளில் புதிய ஆர்வத்தையும் கொடுக்கும் என்று நம்புகிறேன்" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாவலன்

## எம் கருத்து

### செம்மணிப் புதைகுழிகள்- மக்கள் பாதுகாக்கப்பட வேண்டும்

செம்மணி புதைகுழிகள் விவகாரம் தொடர்கதையாக நீண்டு கொண்டே செல்கிறது. அங்கு புதைகுழிகள் உண்டென்ற உண்மை வெளியிடப் பட்டும் நீண்டகால தாமதத்தின் பின்னரே, மனிதநேய அமைப்புக்களும் பொதுமக்களும் இடைவிடாது குரல் எழுப்பியதன் பயனாக, இனி தட்டிக் கழிக்க முடியாதென்ற நிலையில் அகழ்வு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. யாழ் மறைமாவட்ட நீதி சமாதானத்திற்கான ஆணைக்குழுவும் இதனை பன்முறை வலியுறுத்தி வந்துள்ளது.

ஆனி மாதம் 16ஆம் திகதி புதைகுழிகள் தோண்டப்பட்ட பொழுது இரு மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டது. மட்டுமல்லாமல் இனங் காணக்கூடிய தடயங்களும் அகப்பட்டன. ஆகவே மரணதண்டனைக் கைதி ராஜபக்ஸவினால் வெளியிடப்பட்ட தகவல்கள் உண்மையே என்றாகின்றது.

ஆனால் ஏனைய புதைகுழிகள் தோண்டும் வேலை உடனடியாகத் தொடராமல் செப்டம்பர் 6ஆம் திகதிக்கு போடப்பட்டுள்ளமை திருப்தி அளிப்பதாக இல்லை. செப்டம்பர் மாதத்தில் மழை பெய்ய ஆரம்பித்துவிடும். அதன் பின் இவ் வேலை தொடர முடியாது. ஆகவே அகழ்வு வேலைகள் இவ்வளவு பிற்போடப்பட்டதன் காரணம் என்ன? புதைகுழிகளின் இரகசியத்தை ராஜபக்ஸ வெளியிட்டது முதல் அங்கு அகழ்வு வேலை மேற்கொள்ளப்பட்டது வரையுள்ள காலப் பகுதியில் அங்கு நடந்த விடயங்கள் பொதுமக்களால் உன்னிப்பாக அவதானிக்கப்பட்ட போதிலும் அதுபற்றி வாய்திறக்க முடியாத ஓர் அச்ச சூழ்நிலையில் அவர்கள் வாழ்ந்து வருகிறார்கள். இந்த அகழ்வு வேலை நடைபெறக்கூடாது என்பதில் அக்கறையுள்ளவர்கள் இருக்கிறார்கள் என்பதும் தெளிவு. செம்மணியில் மட்டுமல்ல இன்னும் எத்தனை இடங்களில் இத்தகைய புதைகுழிகள் உள்ளனவோ? காணாமற்போன அறுநூற்றுக்கும் மேற்பட்டவர்கள் எல்லாம் எங்கே போனார்கள்? காணாமற் போனோர் என்று கை கழுவிவிட முடியுமா?

இத்தகைய பாதகச் செயலைச் செய்தவர்கள் கண்டுபிடிக்கப்படுவதும் தண்டிக்கப்படவேண்டியதும் அவசியம் தான். ஆனால் அதைவிட இப்படிப்பட்ட செயல்கள் இனிமேலும் நேராது என்பதற்கு உத்தரவாதம் வேண்டும். காரணமின்றி மக்களை கைது செய்யவும், கைது செய்யப்பட்டவர்கள் விசாரணையின்றி சித்திரவதை செய்து கொல்லப்படுவதற்கும் சட்டங்கள் துணைபோகும் வரை மக்கள் அச்சமின்றி பாதுகாப்பாக வாழும் நிலை ஏற்படப் போவதில்லை. ஆகவே இக்கொடுரங்கள் புரியப்படுவதற்கு ஏதுவாய் இருப்பதாகிய அவசரகாலச்சட்டம், பயங்கரவாதச் தடைச்சட்டம் ஆகியவை மறு பரிசீலனை செய்யப்பட வேண்டும் என்ற நீதி - சமாதான ஆணைக்குழுவின் கோரிக்கையை நாமும் வலியுறுத்துகிறோம்.

# கொடூரங்கள் புரியப்படுவதற்கு ஏதுவாய் இருப்பதாகிய அவசரகாலச் சட்டம், பயங்கரவாத தடைச்சட்டம் ஆகியவை மறுபரிசீலனை செய்யப்படவேண்டும்

## -செம்மணிப் புதைகுழிகள் தொடர்பாக நீதிசமாதான ஆணைக்குழு அறிக்கை

கண்டபடி கைது செய்தல், சித்திரவதை, பலவந்தமாக காணமற்போதல் போன்ற பல கொடூர மனித உரிமை மீறல் என்ற பயங்கரக்கதை ஆரம்பமாகி, மூன்று ஆண்டுகளின் பின், செம்மணிப் புதைகுழி அகழ்வு தொடங்கியுள்ளது.

இரு எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டு, உறவினரால் இனங்காணப்பட்டுள்ளன. அவ்வுறவினரை ஆழ்ந்த உணர்ச்சிகளில் மூழ்கவைக்கும் பரிதாப நிகழ்வு இது. காணாமற்போன தம் இனிய உறவுகள், எங்கோ ஒரு தடுப்புக்காவல் நிலையத்தில் இருப்பார்கள், அவர்களை உயிரோடு காண்போம் என்று தான் அவர்கள் எண்ணி இருந்தார்கள். காணாமற் போனோரும் ஏனையோரைப் போன்றுதான் வாழத் துடித்தவர்கள். தங்கள் குடும்பங்களை வாழவைக்க உழைத்தவர்கள். இவர்களுக்கு நேர்ந்த கதி! தீய சக்திகளால், சதித் திட்டங்களால், இளமைப்பருவத்திலேயே வெறும் எலும்புக் கூடுகளாக சீரழிக்கப்பட்டுள்ளனர்.

அடையாளம் காணப்பட்டோரின் உறவினருக்கு ஒரு சிறிய ஆறுதல்: அவர்களுக்கு என்ன நிகழ்ந்தது? என்ற அங்கலாய்ப்பு அணைந்துவிட்டது. சமய சடங்குகளையும் செய்து விட்டு மனதை ஓரளவு சாந்திப் படுத்திக் கொள்ளலாம். ஆனால் மனவேதனையோ தொடர்ந்தும் ஆறாப்புண்ணாக கொதித்துக் கொண்டேயிருக்கின்றது. அது ஒருபுறமிருக்க, காணாமற்போன நூற்றுக்கணக்கான ஏனையோருடைய உறவினரின் கண்ணீருக்கும் பெருமூச்சுகளுக்கும் எப்போது தீர்வு கிடைக்குமோ!

16-6-99இல் செம்மணியின் ஒரு பகுதியில் செய்யப்பட்ட வேலை, நீண்ட ஒரு செயற்பாட்டின் சிறிதளவான முதற்படியே, காணாமற்போனோரின் எண்ணிக்கையோ சில நூறுகளாகும், புதைகுழிகளும் ஒன்றிரண்டல்ல.

இந்த நிலையில், செம்மணிப் புதைகுழி அகழ்வுப்பணி எவ்வளவு தூரம் துரிதமாகவும், நீதியாகவும் நடத்தப்படும் என்பது பற்றி மக்களின் மனதில் ஐயம் முற்றாக அகலவில்லையென்றால் அதற்கு காரணமில்லாமலில்லை. அந்த அப்பாவிகளைக் கைது செய்ததை அதிகாரிகள் மறுத்தமை, நடாத்தப்பட்ட பல விசாரணைகளின் முடிவை வெளிப்படுத்தாது மௌனம் சாதித்தமை, கொடூர சித்திரவதைக்கான ஆதாரங்கள், அத்துடன் ராஜபக்ஷ நீதி மன்றத்தில் வெளிப்படுத்திய சாட்சியத்தையடுத்து செம்மணிப் பகுதியில் புகைமேகங்கள் எழும்பியது என்ற செய்தி; கனரக வாகனங்களின் நடமாட்டங்கள் போன்ற செய்திகள்-இவையெல்லாம் ஐயங்களை ஏற்படுத்தும் காரணிகளாக மக்கள் மனதில் படிந்துள்ளன. சம்பந்தப்பட்ட அதிகாரிகள், இவ்விடயத்தில் தம்மை நீதியும் நேர்மையுமானவர்களெனக் காட்டிக் கொள்ள விரும்பினால், அவர்கள் எடுக்க வேண்டிய பல நடவடிக்கைகள் உள்ளன.

(1)புதைகுழி அகழ்வுப்பணி தாமதிக்கப்படாது, உரிய வேகத்துடன் தொடரப்படல் வேண்டும்.

(11)தடயங்களின் பகுப்பாய்வு யாழ்ப்பாணத்திலேயே நடாத்தப்படுவதற்குரிய வழிவகைகளுக்கான ஏற்பாடுகள் செய்யப்படல் வேண்டும்.

(111)ராஜபக்ஷ தவிர்ந்த ஏனைய சாட்சிகள் குறிப்பிடும் புதைகுழிகளும் ஆய்வு செய்யப்படல் வேண்டும்.

(iv)இப்பணியைத் துரிதப்படுத்துவதற்கு மேலும் சில வெளிநாட்டு நிபுணர்களின் உதவி – தேவையாயின் ஐ. நா. சபையின் அனுசரணையுடன் - நாடப்படல் வேண்டும்.

(v) காணாமற்போனதாக நிரூபிக்கப்பட்டோரின் உறவினர்களுக்கு நியாயமான நட்ட ஈடு வழங்கப் படல் வேண்டும்.

(vi) சம்மந்தப்பட்ட குற்றவாளிகளும் அவர்களுக்குப் பொறுப்பாய் இருந்த அதிகாரிகளும் நீதி விசாரணைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.

(vii)இக்கொடூரங்கள் புரியப்படுவதற்கு ஏதுவாய் இருப்பதாகிய, அவசரகாலச் சட்டம், பயங்கரவாத தடைச்சட்டம் ஆகியவை மறு பரிசீலணை செய்யப்பட வேண்டும்.

(viii)இச் சட்டங்களால் இடைநிறுத்தப்பட முடியாத உரிமைகளின் பட்டியல் அதிகரிக்கப்பட்டு, கைது செய்தல், தடுத்து வைத்தல், நீதி விசாரணை போன்ற விடயங்களில் சாதாரண சிவில் விதிமுறைகள் கையாளப் படுவதற்கான. சட்டங்கள் அமைக்கப்படல் வேண்டும்.

எமது ஆணைக்குழு மேற்கூறப்பட்ட பயங்கள் நம் மத்தியில் கட்டவிழ்க்கப்பட்ட காலத்தில், யாவருக்குமென ஒரு திறந்த கடிதம் (10.10.1995) விடுத்திருந்தது. தொடர்ந்தும் பல கடிதங்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எழுதி வந்துள்ளது. அந்த முதல் கடிதத்தில் எழுதப்பட்ட ஒரு கூற்று இங்கு குறிப்பிடத்தக்கது. "பலவந்தமாக காணாமற் போனோரின் கதி என்ன? இது அவர்களையும் அவர்களது உறவினரையும் மாத்திரம் வாட்டும் கேள்வி மட்டுமன்று. நீதி சமாதானத்தையும், மனித மாண்பையும் பேண விரும்பும் சகலருடைய மனச்சாட்சியையும் தட்ட வேண்டிய கேள்வியுமே" இக்கேள்வியை, செம்மணிப் புதைகுழிகள் இன்று மீண்டும் மிகப்பலமாக எதிரொலிக்கின்றன.

## அருட்தந்தை இம்மானுவேல் விஜயரட்ணம் அ. ம. தி. இறைபதமடைந்தார்



அலைகடல் மோதி கவிபாடும் வல்வையூரில் அவதரித்த அருள்திரு இம்மானுவேல் விஜயரட்ணம் அடிகள் 05-07-99 அன்று இறைவனால் இம்மண்ணிலிருந்து அழைக்கப் பட்டார். கொழும்புத்துறை புனித சூசையப்பர் அ.ம.தி குருமடத்தில் ஆன்மீக வழிகாட்டியாக, நல்ல ஆசானாகப் பணியாற்றிக் கொண்டிருந்த வேளையில் எதிர்பாராத விதமாக மரணத்தைத் தழுவிக்கொண்டமை யாழ் அமலமரித் தியாகிகளுக்கும், தலத் திருச்சபைக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

ஆழமான விசுவாசம், அறிவுக் கூர்மையும் சிறந்த பண்புகளும், ஆற்றல்களும், கொண்டமைந்த இளைஞன் ஒரு அமலமரித் தியாகியாக ஆவல் கொண்டான். அதற்காக பெருமையும், புகழும் தேடித் தருகின்ற மருத்துவத்துறையை உதறித் தள்ளிவிட்டு உலகம் மடமை என்று கருதும் சிலுவையை தன் கழுத்தில் அணிந்து கொண்டான். ஓர் அமலமரித் தியாகியானான். "எரியாத திரிகளால் எனக்குப் பயனேது" என்று சவால் விட்டு, சாதனை படைத்து, உண்மைத் தியாகிகளாய் செயற்பட அறைகூவல் விடுத்த நிறுவுனர் புனித இயூஜின் டிமசனெட்டின் குரலொலியை தன் மந்திர விளக்காகக் கொண்டு இறுதி மூச்சுவரை அதை நிஜமாக்கிட திடசங்கர்ப்பம் பூண்ட இவர், காலத்தில் திறமையாகச் செயற்பட்டார். இலங்கையிலும், இந்தியாவிலும் அமைந்துள்ள குருமடங்களையும் சந்நியாச இல்லங்களையும் தன் பணிக்களமாக்கி நிறுவுனரின் கனவினை நனவாக்க அயராது உழைத்தார். அருட்சாதனங்களைத் தன் வாழ்வாக்கி வாழ்ந்து காட்டினார்.

"அப்போஸ்தலர்களின் அடிச்சுவடுகளைப் பின்தொடர ஆவலும் துணிவும் கொண்ட மனிதர்களை என் சபைக்குத் தேடுகின்றேன்" என்ற புனித இயூஜினின்

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

## 1999 CMF 1849 கிளரீசிய சபையினரின் 150 ஆண்டுகள் நிறைவில்...

## அன்ரனி மரிய கிளாரட்டின் பிறப்பு

- அலன் யோசவ் -

> கிளரீசிய சபையினர் யாழ் நகரில் தமது இல்லத்தை அங்குரார்ப்பணம் செய்து தம்பணிகளை அண்மையில் தொடங்கியுள்ளனர். அவர்களது சபையின் 150' ஆண்டுகள் நிறைவை யொட்டி 1998-1999 நவ சந்நியாச சகோதரர்கள் அலன் யோசவ், சீலன், சியாம், செல்வக்குமார், வரதன் தொகுத்துத்தரும் வரலாற்றினை கிளரீசிய சபையினரின் 150 ஆண்டுகள் நிறைவில் என்னும் தலைப்பில் தொடர் கட்டுரையாக வழங்க இருக்கிறோம். யாழ் நகருக்கு புதிதான இந்த சபையையும், அவர்களது ஸ்தாபகர், அவர்களுடைய பணிகள் ஆகியவற்றையும் படித்து அறிந்து கொள்ள பாதுகாவலன் வாசகர்களுக்கு இத்தொடர் பெரிதும் உதவும் என நம்புகிறோம். இதோ படிக்கத் தொடங்குங்கள் . . . .
>
> (ஆ-ர்)

ஸ்பெயின் நாட்டில் பெரனிஸ் மலையின் அடிவாரங்கள் இயற்கை அழகின் உறைவிடமானவை இறைவனது படைப்பின் உயர்வை உணர்த்தும் எழில்மிகு மலைகளும், அதில் உள்ள பூஞ்சோலைகளும், புல் நிறைந்த மேடுகளும் உயிரினங்களும் இயற்கையின் எழிலுக்கு மெருகூட்டின. பெரனிஸ் பள்ளத்தாக்கின் பக்கத்தில் உள்ள மன்ரேசாவின் அருகில் உள்ள ஒரு சிறு பட்டணமாகிய சள்ளியத்தில் நமது நாயகன் அன்ரனி மரிய கிளாரட் விசுவாசம், மத நம்பிக்கை, நாகரீகம் போன்றவைகட்குப் பெயர் பெற்ற ஒரு குடும்பத்தில் கி.பி 1807 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 23ம் நாளன்று கிளாரட் பிறந்தார். மகிழ்ச்சி நிறைந்த கிறிஸ்து பிறப்பு விழா தினத்தன்றே குழந்தைக்கு நீராட்டு அளித்தனர். திரு நீராட்டுதலின் போது பெற்றோர் குழந்தைக்கு அன்ரனி என்று பெயரிட்டனர். பிறந்த இரண்டு தினங்கள் முடியுமுன்னரே அந்த பிஞ்சு இதயம் தூய ஆவியின் ஆலயமாக மாறியது. அன்ரனியின் தந்தையின் பெயர் ஜான் கிளாரட், தாயின் பெயர் யசோபா கிளாரா. பதினொரு அங்கத்தவர்கள் உள்ள குடும்பத்தில் ஐந்தாவது மகனாக கிளாரட் பிறந்தார். கிறீஸ்தவ வாழ்க்கையிலும், சமூக வாழ்க்கையிலும் முன்மாதிரியானவர்களாகவும், பக்தி, பிறரன்பு, உழைப்பு முதலிய நற்குணங்கள் உள்ள ஒரு குடும்பமாகவும் அவர்கள் விளங்கினார்கள். பொருளாதார நிலையில் முன்னிலையில் இல்லையென்றாலும் அவர்களுக்கு உடைமையாக ஒரு சிறிய நெசவு ஆலை இருந்தது. அதில் அவர்கள் நெசவு வேலை செய்து வந்தனர். அன்ரனியின் பெற்றோர் வேலைப்பழுவும் மற்ற இடையூறுகள் இருந்த போதும் பிள்ளைகளைத் தக்க முறையில் வளர்ப்பதில் ஒரு குறையும் வைத்ததில்லை. மத உண்மைகளை மனதில் பதிப்பிப்பதற்கும் செபங்கள் சொல்லிக் கொடுப்பதற்கும் அவர்கள் ஒரு நாளும் பின்வாங்கவில்லை. தினந்தோறும் குடும்ப செபமாலை சொல்வது அக் குடும்பத்தின் வழக்கமாக இருந்தது. அது மாத்திரமன்றி இரவு உணவிற்கு பின்னர் பிள்ளைகளுக்கும் நற்செய்தி நூலில் வரும் கதைகளையும், புனிதர்களினது வாழ்க்கை வரலாற்றின் முக்கியமான பாகங்களையும் விபரித்து உரைப்பதும் குடும்பத் தலைவரான ஜான் கிளாரட்டின் வேலையாக இருந்தது. இப்படியான பயிற்சிகள் கிளாரட்டின் அந்த பிஞ்சு இதயத்திலே இறைவனின் மேலுள்ள அன்பையும், பக்தியையும், விசுவாசத்தையும் அதிகரிக்கச் செய்தன.

வளரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உணர்வுச் சித்திரம் 1

~வானம்பாடி


### படையப்பா

படையப்பா வெளியீட்டுநாள்.
காலையே படையப்பா என்னுள்
துடிக்கத் தொடங்கினார்.
வகுப்பிலும் பாடநேரத்திலும் படையப்பாவின்
பாசத்துடிப்பு குறைந்தபாடில்லை.
பள்ளிக்கூடம் முடிந்ததும்
படையப்பாவுடன் சிகரத்தில் ஏற
வீட்டுக்குப் பறந்து வந்தேன்.
"அம்மா 30 ரூபா வேணும்" என்று கத்தினேன்
"எதற்கடா காசு" அம்மா கத்தினா
"படையப்பா பார்க்க" என்று அவவுக்கு
அவவின் தொனியில் பதில் அளித்தேன்.
அம்மாவும் ஒரு படவிசர் நிச்சயமாக
காசு தருவா. இருந்தும்
"டே கணித ரியூசன் இருக்கில்ல" என்றா.
"அது அடுத்த கிளாசிற்கு போகலாம்
முதல் நான் படையப்பா பார்க்க வேண்டும்",
"அந்த மாஸ்ரர் உனக்கும் எனக்கும்
சேர்த்துப் பேசுவார். உனக்கு அடியும் தருவார்",
"அவற்ற பேச்சும் அடியும் பழகிப் போச்சு
காசைக் கெதியாய்த் தாண" என்று கத்தினேன்.
"இந்தா புடி" காசை எறிந்தா.
நான் நண்பர்களுடன் படம் பார்த்தேன்,
சிகரத்துக்கு ஏறி வானத்தில் பறந்தேன்.
படம் பார்க்கத் தடைக்கல்லா இருந்தவை
எல்லாம் படிக்கல்லாக்கிப் படம் பார்த்தேன்.

இரண்டு நாளாய் படையப்பாவின் நினைவில்
பறந்து திரிந்தேன். கண்ணாடி முன் நின்று
நெளிந்தேன், வளைந்தேன்.
மூன்றாம் நாள் மாலை கணித
ரியூசனுக்குச் செல்ல புறப்பட்ட போது
"வாங்கப் போறாய், வாங்கப் போறாய்!
அடியும் பேச்சும் வாங்கப் போறாய்"
என்று இதயத்துடிப்பில் ஒரு செய்தி.
"சோதனை வருகுது கணிதம் முக்கியம்,
காலம் கடத்தாது போ போ" என்று
மனம் துரத்தியது.
ரியூசன் அறையில்
"படமல்ல முக்கியம்
படிப்பு முக்கியம்" என்ற வார்த்தை
மனத்திரையில் விழுந்தது.
"தடைக்கல் எல்லாம் படிக்கல்லப்பா"
என்று பாட்டைப் பாடிக்கொண்டு
ரியூசன் செல்லத் துணிந்து விட்டேன்.

வெளிக்கதவைத் திறந்து உள்ளே சென்றேன்.
மெதுவாக யன்னல் ஊடாக
சேரைத் தேடினேன். அவரைக் காணவில்லை.
கரும்பலகையில்
பெரிய எழுத்தில்
மஞ்சள் சிவப்பு நிறத்தில்
"படியப்பா" என்று
இருப்பதைக் கண்டதும்
மனம் திக்கென்றது.
என்னையறியாது என் உணர்வில்
மின் பாய்ந்தது போன்ற திடீர்த் தாக்கம்
கதிரையில் அமர்ந்தேன்.
உடல் வேர்த்தது.
உள்ளத்தில் "படியப்பா"
படியத் தொடங்கினார்.
"படையப்பா" வெளியேறினார்.

## 02 உரிமைகள்... உரிமைகளுக்காக...




### குரலற்றவர்க்காய் ஒலித்த குரல்

திடீரென ஒலித்த துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் பேராயர் ஒஸ்கார் றொமேரோ ஒப்புக்கொடுத்துக் கொண்டிருந்த திருப்பலியைக் குழப்பி ஆலயத்தை அதிரச் செய்தது.

அந்தவேளை ஆயர் மறையுரை ஆற்றிக் கொண்டிருந்தார். "கோதுமை மணியானது நிலத்தில் வீழ்ந்து மடிந்தாலொழிய . . ." என்ற வாசகத்தை விளக்கும் உரையாக அந்த மறையுரை அமைந்திருந்தது. "கோதுமை மணியானது மடிவது போல் தோன்றுகின்றது. ஆனால் உண்மையில் அது வாழ்கின்றது. அதே போன்று கிறிஸ்துவின் அன்பின் நிமித்தம் பிறர் சேவைக்கெனத் தன்னை அர்ப்பணிக்கும் எவனும் வாழ்வான். கோதுமை மணி தன்னை உருக்குலைப்பதால்தான் பெரும் அறுவடையை விளைவிக்கின்றது. வரலாறு எம்மிடம் எதிர்பார்க்கும் துணிச்சலான சாதனைகளில் ஈடுபட நாம் மறுக்குமளவுக்கு நம்மை நேசித்தலாகாது. இவ்வாறு ஆபத்தைத் தவிர்ப்பவர்கள் ஈற்றில் தம்மை இழப்பார்கள்"

இச்சிந்தனை எல்சல்வடோர் நாட்டில் ஒஸ்கார் றொமேரோ பேராயராகப் பணிபுரிந்த சூழலிலே மிகவும் அர்த்தமுள்ளதானது. அந்நாட்டின் இரண்டு வீத மக்கள் நிலத்தையும், செல்வத்தையும் தங்கள் பிடியில் வைத்துக் கொண்டு எஞ்சிய 98 வீதத்தினரையும் வாட்டி வதைத்துக் கொண்டிருந்த காலம். இப் பெரும் எண்ணிக்கையினரின் காணிபூமி பறிக்கப்பட்டு, கல்வியுரிமை பேச்சுரிமை போன்ற பல உரிமைகளும் மறுக்கப்பட்டு கண்டபடி சுட்டுக் கொல்லப்படக் கூடியவர்களாய் அடிமை வாழ்வுக்குத் தள்ளப்பட்டு பலவித அநீதிகளாலும் வன்செயல்களாலும் நசுக்கப்பட்டுவந்த காலம். குரலற்ற இவர்களுக்காய் குரல் கொடுப்பது மிகவும் ஆபத்தான செயலானதால் "நமக்கேன் தேவையில்லாத பிரச்சனை?", என்று சொல்லிக் கொண்டு, பலரும் ஒதுங்கி மௌனமாயிருக்க விரும்பிய காலம். குரல் கொடுத்தவர்களாகிய சில குருக்களும் கன்னியர்களும் படுகொலை செய்யப்பட்ட காலம். இத்தகைய சூழலில் பேராயரின் மறையுரை பலருக்குச் சவால் விடுப்பதாயும், சிலருக்கு உற்சாகமூட்டுவதாயும் அர்த்தம் நிறைந்து அமைந்திருந்தது.

மறையுரை அத்தன்மையினதாயிருந்தாலும் பேராயர் வாழ்நாள் பூராக அதற்கொப்ப வாழ்ந்தவரல்ல. "வரலாறு எம்மிடம் எதிர்பார்க்கும் துணிச்சலான அதாவது ஆபத்து விளைவிக்கக்கூடிய சாதனைகளில் ஈடுபட நாம் மறுக்குமளவுக்கு நம்மை நேசித்தலாகாது." இக்கொள்கையை அவர் தமது பணி வாழ்வின் ஆரம்பத்திலிருந்தே கடைப்பிடித் தவராகத் தெரியவில்லை.

ஆவணி 15, 1917இல் பிறந்த இவர் சித்திரை 4, 1942இல் குருப்பட்டம் பெற்றார். ஆற்றல், திறமைகள் நிறைந்தவராயிருந்தும் பழமைவாதியாகவே இருந்துவந்தார். திருச்சபையில் மாற்றங்களைப் பெரிதும் விரும்பியவரல்ல. வத்திக்கான் சங்கம் புகுத்திய புது முறைகளைக்கூட மனமார ஏற்றுக் கொண்டவரல்ல.

தனது ஆன்மாவை மறந்து தன்னை உலக நிறுவன மயமாக்கிக் கொண்டதோர் திருச்சபையின் பிரமாணிக்கமுள்ள அங்கத்தவன் போன்று பலருடைய பார்வைக்கு அவர் தோன்றினார். இவ்வாறு அவர், "மொன்சிஞ்ஞோர்" பட்டம் பெற்று சில மாதங்களின் பின் சல்வடோர் ஆயர் குழாமின் செயலாளர் நாயகமாக்கப்பட்டு அதையடுத்து மத்திய அமெரிக்க நாடுகளின் ஆயர் குழுவின் நிறைவேற்றுச் செயலாளராக நியமனம் பெற்று பின்னர் 1970களில் துணை ஆயராகத் திருநிலைப்படுத்தப்பட்ட போது இவையெல்லாம் பணித்துறையின் பாரிய பொறுப்புக்களாகவல்ல, பதவி என்ற ஏணியின் படிகளாவே தோன்றின.

ஆயர்பட்டச் சடங்கு பெரும் ஆடம்பரங்கள், ஆரவாரங்கள் மத்தியில் நிறைவேறியது. ஜனாதிபதி, இராணுவ அதிகாரிகள் போன்ற ஆளும் வர்க்கத்தினர் பலரும் அழைக்கப்பட்டிருந்தனர். அநீதி இழைத்துக் கொண்டிருந்த ஆளும் வர்க்கத்தினரை எதிர்த்து, சமூக மாற்றங்களுக்காக வாதாடிக் கொண்டிருந்த குருக்களுக்கு இச்சடங்கு வெறுப்பையூட்டியது.

காரணம் சல்வடோரின் சமூக அமைப்பினில் நடுவர்க்கத்தினர் என்ற ஒரு பிரிவினர் இல்லையென்று கூறுமளவுக்கு, மிகச் சிறுபான்மையினரான மேல்வர்க்கத்தினரும் மிகப் பெரும்பான்மையினரான கீழ்வர்க்கத்தினருமென்று மக்கள் துருவப்படுத்தப்பட்டிருந்தனர். வாழ்க்கைத் தரத்தைப் பொறுத்த வரையில், இரு வர்க்கத்தினருக்குமிடையே நிலவிய வேறுபாடு பாதாளமாகப் பிளந்திருந்தது.

எனவே சமூக அநீதிகளை எதிர்த்து நீதிக்காக உழைத்துக் கொண்டிருந்த குருக்களுக்கு அந்த ஆயர்பட்டச் சடங்கு நடாத்தப்பட்ட விதம் வெறுப்பையூட்டியது ஆச்சரியமல்ல.

மறுபுறம், இவர்களை தீவிரவாதத்தினராகக் கருதிய ஆயர் றொமேரோவுக்கு இவர்களுடைய கொள்கைகள் பிடிக்கவில்லை. மேல்வர்க்கத்தினரோடு முரண்படும் போக்கை அவரால் ஏற்க முடியவில்லை. அவருடைய இந்த நிலைப்பாடு "ஓறியென்ராசியோன்" என்ற மறைமாவட்ட செய்தித்தாளின் ஆசிரியராக அவர் எழுதிய ஆக்கங்களினூடாக வெளிப்பட்டது. தனக்கு முன்பிருந்த ஆசிரியர் சமூக நீதி விடயங்களுக்கு முதன்மை கொடுத்தவிடத்து, இவர் அதே வழியைப் பின்பற்றாது, "போதைவஸ்து", "மதுபானம்" போன்ற தீமைகள் பற்றியே கரிசனம் செலுத்தினார். நாட்டின் சிறந்த பாடசாலைகளை நிர்வகித்து வந்தவர்களாகிய யேசு சபைக் குருக்கள் "ஏழைகள் சார்பான விருப்பத் தெரிவு" என்ற கொள்கையை நடைமுறையில் ஏற்று சமூக அநீதிகளுக்கெதிராக முன்னின்று மேற்கொண்ட செயற்பாடுகளும் ஆயர் றொமேரோவுக்கு அதிருப்தியைத்தான் கொடுத்தன. அவற்றைத் தனது ஆசிரியர் கண்ணோட்டத்தில் கண்டித்துமுள்ளார். திருச்சபையானது 'நல்லவர்களான' செல்வந்தரையும், 'நல்லவர்களான' ஏழைகளையும் உள்ளடக்கிய ஓர் சமூகமே என்றுதான் பொதுவாக திருச்சபையின் தலைமைத்துவத்தினர் எண்ணியிருந்தனர். ஆயர் றொமேரோவும் இதற்கு விதிவிலக்காயிருக்கவில்லை.

ஆனால் படிப்படியாக ஆயருடைய இந்த மனநிலைப் பாடும், போக்கும் மாற நேர்ந்தது. 1974ம் ஆண்டில் 'சந்தியாகோ டி மறீயா' என்ற மறைமாவட்டத்தின் ஆயராக நியமிக்கப்பட்டார். நியமனம் பெற்ற ஒரு வருடத்தினுள் அவருடைய பங்கு ஒன்றில் கொடூரச் சம்பவமொன்று நிகழ்ந்தது. . . .

(வளரும்)

## ஒரே ஒரு முத்தம்

நீண்ட நாட்களாய் என்னுள் மறைந்திருந்த ஆசை மீண்டும் இன்று தலை தூக்கியது. எப்பவும் நான் போகேக்க ஒரே சனமாகத் தான் இருக்கும். இன்றும் சனம்தான், ஆனால் ஓரளவே இருந்தது. எப்படியும் நிறைவேற்றிவிட வேண்டும் என்று மனம் துடியாய் துடித்தது. நினைத்த மாத்திரத்திலேயே உடம்பு பூராகவும் ஒரே படபடப்பு, காரணம் எனது கூச்சசுபாவமே. ஆயினும் இன்று மனதில் ஓர் துணிவு. எப்படியும் இன்று உதடு பதிய முத்தமிடவேண்டும் என்று மனம் உறுதி கொண்டது. தினமும் முயற்சிப்பேன், ஆனால் சனத்தின் முன் முத்தமிட வெக்கம். எல்லோரும் முத்தமிடுவார்கள். ஆனால் எனக்குத்தான் கூச்சமாக இருக்கும். அதனால் க்காரியம் ஒரு போதும் கைகூடுவதில்லை.

இன்று வெள்ளிக்கிழமை. மணிக்கூட்டைப் பார்த்தேன். நேரம் சரியாக 1:10, இருந்த ஆட்களில் மேலும் இருவர் வெளியேறிவிட்டார்கள். மனதுக்குள் ஒரு தெம்பு வந்தது. இருந்த ஆட்களை எண்ணிப் பார்த்தேன், சரியாக 5 பேரே. காரியத்தில் இறங்க முடிவெடுத்தேன். "ஆண்டவரே பெலனையும் துணிவையும் தாரும்" மனம் ஒருமுறை வேண்டிக்கொண்டது. என்ன வெக்கம்? என்ன பாவமா செய்கிறேன்? என்று என்னை நானே கேட்டுக் கொண்டேன். எழுந்து நடக்க ஆரம்பித்தேன். உறுதியான நடையில், நன்றாக நெருங்கிவிட்டேன்.
இறுக்கிப் பிடித்துக்கொண்டேன்.
கால்களில் மென்மையாக முத்தமிட்டுவிட்டு விறுவிறு என்று வெளியேறி சைக்கிள் அடிக்கு வந்துவிட்டேன். மனதினுள் ஒரு நிம்மதி பிறந்தது. "அப்பாடா" என்று பெருமூச்சு விட்டபடி சிலுவையில் தொங்கும் ஆண்டவரை முத்தமிட்ட மனச் சந்தோஷத்துடன் அருள் ஆச்சிரமத்தை விட்டு வெளியேறினேன்.

– து. பிலிப்ஸ் அருள்நேசன்

## பேறுபெற்றோர்

– அருள் சகோ. மேரி கெட்விஜ். –


வேதாகம ஞான நூல்களில் நற்பேறுடையோர் பற்றிப் பல இடங்களிற் கூறப்படுகிறது. ஆண்டவருக்கு அஞ்சி நடப்போர் பேறுபெற்றோர். அவர் மகிமை மிக்கவராய், ஆசீர்வதிக்கப்பட்டவராய் இருப்பார். வாழ்வு, உடல்நலம், ஆசீர், செல்வம் ஆகியவற்றை நிறைவாகப் பெற விரும்பினால் அவர் இறைவழி நடக்கவேண்டும். சட்டத்தின்படி நடக்க வேண்டும். ஞானத்திற்குச் செவிமடுக்க வேண்டும். அதனைக் கண்டடைய வேண்டும். ஏழைகளைக் கவனித்துக் கொள்ள வேண்டும். நற்பேறு உடையவன் இறைவனுடன் இணைந்து, அனைத்தையும் கொண்டுள்ளதால், பிறவற்றை முற்றாகக் கைவிட்டு, எல்லையற்ற நம்பிக்கை கொண்டிருப்பார். ஆண்டவருடைய வாயிற்படியில் நாள்தோறும் விழித்திருந்து, கதவு நிலையருகில் காத்திருந்து, அவருக்குச் செவி கொடுப்பார். அவரிடம் அடைக்கலம் புகுவார் என்பது இஸ்ராயேலர் நம்பிக்கை. அதுமட்டுமல்ல இறை அச்சம், சட்டத்தைக் கடைப்பிடித்தல், ஞானத்திற்குச் செவிமடுத்தல் மூலம் நற்பேறு பெறலாம். இறைவன் முன்னிலையில் நிலையான மகிழ்ச்சியைச் சுவைத்தவாறு, அவருடன் என்றும் இருக்கலாம் என்றும் எதிர்பார்த்தனர்.

யாவேயைத் தம் இறைவனாகக் கொண்ட மக்கள், அதிகமான புதல்வர்களையும், அழகிய புதல்வியரையும், நிறைந்த தானியக் களஞ்சியங்களையும், எண்ணற்ற ஆட்டு மந்தைகளையும், நிறைந்த அமைதியையும், தகுதியான அரசனையும், அறிவுக்கூர்மையுடைய மனைவியையும், பெருஞ்செல்வத்தையும், அனைவர்க்கும் இரங்கும் உள்ளத்தையும் கொண்டிருப்பார். இவ்வுலக செல்வங்களாகிய இப்பேறுகளை அடையாவிட்டாலும், இறைவன் முன்னிலையில் நம்பிக்கையுடனும், தூய்மையுடனும், நற்பண்புகளுடனும் வாழ்ந்து, ஆசி பெற்றவர்களாக உயர்த்தப்பட்டவர்களும் உளர்.

புதியேற்பாட்டில், கிறிஸ்து மலைப் பொழிவில் கிறிஸ்தவ நற்பேற்றிற்கான திட்டத்தை வகுத்தளித்தார். மட்டுமல்ல, நற்செய்தி நூல்களில் இறை வார்த்தையைக் கேட்டு, விசுவசித்த மரியாள், மீட்பரை ஈன்றெடுக்கும் பேறுபெற்றாள். உயிருள்ள இறைவனின் மகன் நீரே என்று வெளிப்படுத்திய இராயப்பர் பேறுபெற்றவர். நீங்கள் அறிந்தவற்றின்படி நடந்தால் பேறுபெற்றோர். காணாமலே விசுவசிப்போர் பேறுபெற்றோர். நீங்கள் காண்பதைக் காணும் கண்கள் பேறுபெற்றவை. நீங்கள் கேட்பதைக் கேட்கும் காதுகள் பேறுபெற்றவை. தலைவர் வந்து பார்க்கும்போது தன் பணியைச் செய்துகொண்டிருக்கும் பணியாள் பேறுபெற்றவர், போன்ற போதனைகளைப் பார்க்கிறோம்.

தன் இதயத்தில் கிறிஸ்துவை நிறுத்தி, இறைவாக்கைக் கேட்போரும், படிப்போரும், அதைக் கடைப்பிடிப்போரும் பேறுபெற்றோர். தங்கள் நீதிச் செயல்களால் அலங்கரிக்கப்பட்டவர்கள், செம்மறியின் திருமணத்தில் பங்குபெற, ஆண்டவருக்குள் இறந்தவர்கள் உயிர்பெறுவர், என்று எழுதப்பட்டுள்ளது. நாமும் கிறிஸ்துவுக்குள் [illegible] பேறு பெற கிறிஸ்துவில் வாழ்வோம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# காவலன் கண்மணிகள்

| | |
|---|---|
| ஒளி : 10<br>சுடர் : 1 | "எம் விழிகளின் ஒளி யேசு எம் வாழ்வின் வழி யேசு" |

அன்பு நிறை கண்மணிகளே!

இறை இயேசுவின் ஆசிகள் உங்களுள் நிறைவதாக. 95இன் பின் "காவலன் கண்மணிகளை"க் காணாது கவலை கொண்டீர்களா? கவலையை விடுங்கள். இன்று தொடக்கம் இறை அன்பை, பிறர் அன்பை, பெற்றோர் அன்பை, அறிஞர் அறிவை, அருளாளர் வாழ்வை உங்களோடு பகிர்ந்துகொள்ள, பாசத்துடன் பகிர்ந்துகொள்ள காவலன் கண்மணிகள் வருகிறார்கள்.

கண்மணிகளே!

95இன் பெயர்வோடு உங்களில் பலர் இடம்பெயர்ந்திருப்பீர்கள். உங்கள் முகவரி மாறியிருக்கும், உங்கள் வயதும் நான்கு வருடங்கள் கூடியிருக்கும். எனவே! தயவு செய்து உங்கள் முகவரி, அங்கத்துவ எண் போன்றவற்றைக் குறிப்பிட்டு உங்கள் ஆக்கங்களை அனுப்புங்கள். புதியவர்க்கும் "காவலன் கண்மணிகள்" பற்றி சிறிது சொல்லிவையுங்கள்.

2000ம் ஆண்டு நெருங்கி வருகிறது. வசதிகள் வளர்ந்து வருகின்றன. நவீன விஞ்ஞான விந்தை புரியும் தொலைக்காட்சி பெருந் தொல்லையாகிவிட்டது எனப் பெற்றோர் பெரியோர் புலம்புகிறார்கள். இவர்களின் மனவேதனையை எப்படிப் போக்கலாம்? கொப்பித்தாளின் ஒரு பக்கத்துள் அடங்கக் கூடியதாக உங்கள் பதிலை எழுதி அனுப்புங்கள். ஒரு கணம் சிறிது மௌனமாக உங்களுக்குள் சிந்தியுங்கள்!

**அன்பே! அருளே! அறிவே! இறைவா!!**
**"என் கிருபை உனக்குப் போதும்" என்று**
**அன்று சின்னப்பருக்குக் கூறிய பெருமானே!**
**இன்று இவ்வேளை இந்தக்கணத்தில்**
**எம் உள்ளத்தில் உம் கிருபையைப்**
**பொழிந்து எம்மைக் காத்து வழிப்படுத்தும்.**

2 கொரிந்தியர் 12ம் அதிகாரத்தை வாசிக்கவும்.

அடுத்த சுடரில் சந்திப்போம்

நன்றி.

*அன்பின் அன்புவிழி.*

# விவிலிய ஏடுகளைப் புரட்டுவோம் 13

*அருள்திரு. ம. இ. பயஸ்*



## அதிகாரம் - 13
(சென்ற இதழ் தொடர்ச்சி)

**அதிகாரம் 13**

### ஆபிரகாம் பெரும் செல்வந்தரானார்

ஆபிராம் எகிப்திலிருந்து கானான் தேசம் திரும்பினார். பெரிய செல்வந்தராக இருந்தார். தாம் இறைவனுக்குப் பீடம் அமைத்த பெத்தேலுக்குச் சென்றார். அங்கு இறைவனின் நாமத்தைக் கூவி அழைத்தார். வெளிநாடுகள் சென்றாலும் இறைப்பற்றைக் கைவிடவில்லை. ஆபிராமுக்கு அவரோடு வாழ்ந்து வந்த மருமகன் (சகோதரன் மகன்) லோத்துவுக்கும் பிளவு உண்டாக அதைச் சுமுகமாகத் தீர்க்கிறார். ஆபிராம் இத்துன்பங்களின் பின் இறைவன் மீண்டும் ஆபிராமுக்குத் தோன்றி ஆசீரை உறுதிப்படுத்துகின்றார்.

**அதிகாரம் 14**

### ஆபிரகாம் லோத்தைக் காப்பாற்றுகிறார்

**சொதோம் அரசனுடனான போர் எடுத்துரைக்கப்பட்டு அதில் சொதோம் அரசன் தோல்வியடைய அவனுடைய நாடு கொள்ளையடிக்கப் பட்டதையும், ஆபிராமின் சகோதரன் மகனான லோத்தையும் செல்வங் களையும் மீட்டு கவர்ந்து சென்றனர். இதை அறிந்த ஆபிராம் அவர்களைத் துரத்திச் சென்று எல்லாச் செல்வங்களையும், லோத்தையும், பெண்களையும், ஆட்களையும் மீட்டுக் கொண்டு வந்தார்.**

லோத்தை மீட்டுத் திரும்பும் போது மறைபொருள் மிக்க மனிதர் ஒருவர் ஆபிராமை எதிர்கொள்ளுகிறார். "சாலேமின் அரசனும் உன்னத கடவுளின் குருவுமாய் இருந்த மெல்கிசெதேக்கு, கைகளில் அப்பத்தையும் திராட்சைரசத்தையும் ஏந்தி வந்து ஆபிராமுக்கு ஆசீர் அளிக்கிறார். ஆபிராம் தாம் கைப்பற்றிய பொருட்களில் பத்தில் ஒரு பங்கை இக்குருவுக்கு கொடுக்கிறார். இப்பொருட்களில் பிறருக்குச் சேரவேண்டியதை அவர்களிடம் ஒப்படைக்கிறார் ஆபிராம். இங்கே குறிக்கப்படும் சாலேம் நகர் எருசலேமைக் குறிக்கும் என்று பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படும். மெல்கிசெதேக்கு அப்பத்தையும் இரசத்தையும் கொடுத்தார். போரிலிருந்து திரும்பிய வீரர்களுக்கு இவற்றை உணவாக அளித்திருக்கக் கூடும். உணவுக்கு முன் "உன்னத கடவுளின் குருவாகிய" மெல்கிசெதேக்கு பலியிட்டுச் செபம் செய்து ஆபிராமுக்கு ஆசீர் அளித்தார் என்று ஏற்றுக்கொள்ளலாம்.

(வளரும்)

# புனித மார்க்சிமிலியான் கோல்பே



*தொடர் குறுநாவல்*

"தம்பி, உனக்குப் படிக்க விருப்பமிருந்தும் பள்ளிக்குப் போக முடியவில்லையாதலால் நான் உதவி செய்கிறேன். தினமும் காலையில் ஒரு மணி நேரம், மாலையில் ஒரு மணி நேரம் இங்கே வா. நான் உனக்குக் கற்றுக் கொடுக்கிறேன்" என்று கடைக்காரர் கூறினார். அவ்வாறே நிகழ்ந்தது.



மாக்சிமிலியான் மருந்துக் கடைக்குச் சென்று அக்கறையுடன் படித்தார். அவர் எத்துணை திறமையாய்க் கற்றுக்கொண்டாரெனில், அந்த ஆண்டின் இறுதியில் அவரது அண்ணனுடன் சேர்ந்து தேர்வு எழுதி, அதிக மதிப்பெண்கள் பெற்று வெற்றியடைந்தார்.

எனவே, பெற்றோர்கள் இன்னும் அதிகக் கடினமாய் உழைத்து அவரையும் பள்ளிக்கு அனுப்பத் தீர்மானித்தனர். வகுப்பில் அவர் முதல்தர மாணவராக விளங்கினார். குறிப்பாகக் கணிதப் பாடத்தில் மிகத் திறமைசாலி. கடினமான கணக்குகளை மனதிலேயே செய்துவிடுவார். எந்தக் கேள்விக்கும் எப்பொழுதும் முதலில் எழுந்து சரியான விடையளிப்பவர் அவர்தான்.



இதற்கிடையில் தானும் குருவாக வேண்டும் என்ற ஆவல் அவரிடம் தொடர்ந்து நிலைத்திருந்தது. அவருக்கு 13 வயது நடக்கும்போது, பிரான்சிஸ்கன் சபைக் குரு ஒருவர் (புனித பிரான்சிஸ் அசிசியால் நிறுவப்பட்ட சபையைச் சேர்ந்த குரு) தமது சபைக்கு இளைஞர்களைச் சேர்க்க அப்பட்டணத்திற்கு வந்தார். மாக்சிமிலியானும் அவரது அண்ணனும் அக்குருவிடம் தம் பெயர்களைப் பதிவுசெய்துகொண்டனர். அவர்கள் பெற்றோரும் அவர்களை அனுப்பி வைக்கத் தயாராயிருந்தனர்.

அவர்கள் வாழ்ந்த பட்டணத்தில் குருமடம் (குருக்களாக விரும்பும் இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கும் இல்லம்) இல்லை. போலந்து நாட்டின் ஒரு பகுதியில் (அப்பகுதி ரஷ்யாவின் ஆதிக்கத்தில் கட்டுப்படாதது) வெகுதூரத்திலுள்ள ஒரு பட்டணத்தில்தான் குருமடம் இருந்தது. அப்பட்டணத்தை அடைவது சிரமமானது; நாட்டின் எல்லைப்புறத்தைக் கடக்க வேண்டியிருந்தது. எனவே அவர்களது தந்தை அவர்களோடு சென்றார்.

எல்லைப்புறத்தைக் கடந்ததும், பையன்கள் இருவரும் அருகிலிருந்த பட்டணத்திற்குச் சென்றனர். தங்கள் வாழ்க்கையில் அப்பொழுதுதான் முதல்முறையாக நீண்ட இரயில் பயணம் தனியே செய்யவேண்டியிருந்தது. இறுதியாய் குருமடம் இருந்த பட்டணத்தை அவர்கள் அடைந்ததும் எத்துணை மகிழ்ச்சி அடைந்தனர்! பிரான்சிஸ்கன் சபைக் குருக்கள் அவர்களை மகிழ்வுடன் வரவேற்றனர்.



பிறகு இரு சகோதரர்களும் அங்கே படிக்கத் தொடங்கினர். மாக்சிமிலியான் அங்கேயும் தன் திறமையைக் காண்பித்தார். குறிப்பாக அவர் விரும்பிய இரு பாடங்கள் கணிதமும் அறிவியலும். அறிவியலில் எத்துணை திறமையோடு விளங்கினாரென்றால், அவர் அடிக்கடி வகுப்பில் கேள்விகள் கேட்பார். ஆசிரியரே பதில் சொல்ல முடியாமல் திகைப்பார்.

சிக்கல்கள் நிறைந்த இயந்திரங்களின் வரைபடங்களை வரைவார். சந்திரனுக்குச் செல்லக்கூடிய இயந்திரம் ஒன்றைக் கண்டுபிடிக்கத் திட்டமிட்டுக் கொண்டிருப்பதாகத் தன் தோழர்களிடம் விளக்கினார். விமானம் கண்டுபிடிக்கப்படாத காலம் அது.

ஒருநாள் மாக்சிமிலியான் தனிப்பட்ட விளையாட்டு ஒன்றைக் கண்டுபிடித்தார். விளையாட்டு மைதானத்தில் மரக்கட்டைத் துண்டுகள் பலவற்றை நிறுத்தி வைத்திருந்தார். அவை யாவும் போர் வீரர்களைக் குறித்தன. அவைகள் யுத்தத்தில் சண்டை புரிவதற்காகக் குறிக்கப்பட்டவை. அவற்றை அவர் முன்னேறச் செய்வார், அல்லது பின்வாங்கச் செய்வார்.

26. திடீரென அங்கு வந்த மற்றொரு பையன் . . . . .

(தொடரும்)



# எதிர்பார்ப்பு

மனிதன் பிறந்ததிலிருந்து பல எதிர்பார்ப்புகளுடன் வாழ்கின்றான். குழந்தை பிறந்தவுடனே, அதன் எதிர்காலத்தையிட்டு பல எதிர்பார்ப்புக்களை பெற்றோர் தம் மனதிலே அமைத்துக் கொள்கின்றனர்.

பிறந்த குழந்தை வளரும்போது, சிறுபராயத்தில் தன் பெற்றோரையொட்டியே பெற்றோரைப் போல தான் வாழ வேண்டும் என்ற எதிர்பார்ப்பை தன்னிலே ஏற்படுத்திக் கொள்கின்றது.

அதே குழந்தை வாலிப் பருவத்தையடையும்போது ஒரு இளம் பெண்/ ஆண் என்ற கோணத்தில் தன் வருங்கால வாழ்வு - தனது வாழ்க்கைப் பங்காளி, தொழில் இலட்சியம் பற்றிய பல கனவுகளுடன் - எதிர்பார்ப்புடன் தன் வாழ்வை எதிர்நோக்குகின்றான் / எதிர்நோக்குகின்றாள்.

எதிர்பார்ப்புக்கள் மனித வாழ்விலே முக்கிய இடத்தை வகிக்கின்றன. இன்று எமது ஒரே எதிர்பார்ப்பு:- நம்மக்கள் சுதந்தரமாக வாழவேண்டும், அடக்கி ஆளப்படும் நிலை ஒழிய வேண்டும், சம உரிமைகளுடன் கூடிய சமாதானம் தோன்றவேண்டும் என்பதே.

இன்றைய எம் நாட்டு நடவடிக்கைகள் மக்கள் படும் அவல நிலைகள், துயரங்கள், இடர்ப்பாடுகள், மாற்றான் தாய் உபசரிப்புகள் ஆகியன எமது எதிர்பார்ப்பிலே ஒரு சந்தேகத்தை - எமது எதிர்பார்ப்பு நிறைவேறுமா என்ற கேள்விக்குறியை எம் மனதிலே தோற்றுவிக்கின்றன.

இவ்வேளையிலே எம் இறைமகன் யேசுவிலே நம்பிகை கொள்வோம். சமத்துவம், சமாதானம்கொண்டு வந்த யேசு தாழ்த்தப்பட்டோர், அமிழ்த்தப்பட்டோருக்காக குரல் கொடுத்த யேசு நிச்சயம் எம் எதிர்பார்ப்பை, ஓர் நாள் நனவாக்குவார். எனவே நம்பிக்கை தளராது தொடர்ந்து செபிப்போம்.

செபமூலம் சந்திப்போம். தமிழ் நெஞ்சங்களுக்கு என் இனிய வாழ்த்துக்கள்.

- கொழும்பு ரஞ்சி -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகில் நடப்பவை சில...

தொகுப்பு : பீ. நியூட்டன்

## அமெரிக்காவில் பத்துக் கட்டளை

ஐக்கிய அமெரிக்காவில் அண்மைக்காலங்களில் குற்றச் செயல்கள் அதிகரித்து வருவது தெரிந்ததே. குறிப்பாக சிறுவர்கள் கொலை வெறி பிடித்தவர்களாக தமக்கிடையே கொடூர முறையில் கொலை செய்வது சாதாரண நிகழ்வாகிவிட்டது.

சிறுவர்கள் மனதிலுள்ள இந்த வக்கிர குணங்களை களைந்து அவர்கள் ஒழுக்கமுடன் வாழ அமெரிக்க அரசு என்ன செய்திருக்கின்றது தெரியுமா?

பத்துக் கட்டளைகள் அடங்கிய சுவரொட்டிகளை பொது இடங்களிலும், பள்ளிகளிலும் ஒட்ட அரசு முடிவு செய்துள்ளது.

செனட்டில் இவ்வாலோசனையை செனட் உறுப்பினர் அடம் போல் என்பவரே முன் வைத்தார். இளைய தலைமுறையினர் கடவுளுக்கு பயந்து ஒழுக்கக் கட்டுப்பாடுடையவர்களாக வாழ இது உதவும் என அவர் கூறுகின்றார்.

## காணிக்கைப் பொருட்கள் திருட்டு

இந்தியாவில் உள்ள பிரபல யாத்திரைத் தலமாகிய அன்னை வேளாங்கண்ணி ஆலயத்தில் பக்தர்கள் அன்னைக்கு வழங்கும் காணிக்கைப் பொருட்கள் ஆலயத்தின் அருங்காட்சியகத்தில் மக்களின் பார்வைக்கென வைக்கப்பட்டுள்ளது தெரிந்ததே.

அண்மையில் திருடர்கள் இவ்வருங்காட்சியகத்திலும் தங்கள் கைவரிசையைக் காட்டியுள்ளனர். அன்னைக்கு பக்தர்கள் உவந்தளித்த காணிக்கைப் பொருட்களில் 75 பவுண் தங்க நகைகளைத் திருடிச் சென்றுள்ளனர். இதன் பெறுமதி கிட்டத்தட்ட இரண்டு லட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

## ஆசியாவில் கத்தோலிக்கர்தொகை அதிகரிப்பு

1988 இல் 8 கோடி 43 லட்சம் ஆக இருந்த ஆசியாவின் கத்தோலிக்கர்களின் எண்ணிக்கை 1997 திருச்சபையின் ஆண்டுக் கணக்கெடுப்பின்படி 10 கோடி 52 லட்சம் ஆக 25 வீதத்தால் அதிகரித்திருக்கின்றது எனக் கூறப்பட்டுள்ளது.

மேலும் 1988 இல் 27, 700 ஆக இருந்த குருக்களின் எண்ணிக்கை 32, 291 ஆக உயர்ந்துள்ளதுடன் உலகிலுள்ள 4, 421 ஆயர்களில் ஆசியாவில் 617 ஆயர்கள் இருக்கிறார்கள் எனவும் உலகில் சுமார் 100 கோடி கத்தோலிக்கர்கள் உள்ளனர் எனவும் இக்கணக்கெடுப்பு தெரிவிக்கிறது.

## பாத்திமாவில் அன்னையின் காட்சி பெற்றவர்களுக்கு முத்திப்பேறு பெற்ற பட்டம்?

1917ஆம் ஆண்டு போர்த்துக்கலில் உள்ள பாத்திமா நகரில் அன்னையின் காட்சி பெற்ற லூசியா, யசிந்தா, பிரான்சீஸ் ஆகிய மூவரில் தற்போது லூசியா மட்டுமே 92 வயது நிரம்பியவராக உயிருடன் இருக்கிறார். இறந்துபோன யசிந்தா, பிரான்சீஸ் ஆகிய இருவருக்கும் முத்திப்பேறு பெற்ற பட்டம் வழங்குமாறு தலத்திருச்சபை பாப்பரசர் 2ம் அருள் சின்னப்பரைக் கோரியுள்ளது.

உயிருடன் இருக்கும் லூசியா இறந்த பின்னரே மற்ற இருவருக்கும் முத்திப்பேறு பெற்ற பட்டம் வழங்கலாம் என கருத்துத் தெரிவிக்கப்பட்டாலும் பாப்பரசர் இது குறித்து விரைவில் அறிவிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 5ம் ஆண்டு நினைவஞ்சலி





க.இராயப்பு பொன்னுத்துரை
பிறப்பு 12.05.1898 இறப்பு 20.07.1994

திருமதி.றெஜினா சொர்ணம் நவரத்தினசிங்கம்
பிறப்பு 04.10.1910 இறப்பு 26.07.1994

"உயிர்ப்பும் உயிரும் நானே. என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்"

இவர்களின் ஆன்ம சாந்திக்காக இம்மாதம் 20ம், 26ம் திகதிகளில் அருள் ஆச்சிரம சிற்றாலயத்திலும், அடைக்கல அன்னை ஆலயத்திலும் திருப்பலிகள் காலை 6.00 மணிக்கு ஒப்புக் கொடுக்கப்படும்.

A/30/99

கீரிமலை றோட்,
பண்டத்தரிப்பு.

# இரணைப்பாலை புனித பத்திமா அன்னை ஆலய வெள்ளி விழா

இரணைப்பாலை, புனித பாத்திமா அன்னை ஆலயம் ஸ்தாபிக்கப்பட்டதன் 25வது வருட நிறைவுவிழா 13. 5. 99 அன்று மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. வைகாசி 4ம் திகதி பங்குத்தந்தை அருட்திரு ஜே. பி. அன்ரனிதாஸ் அவர்களால் கொடியேற்றப்பட்டு நவநாள் வழிபாடுகள் இடம்பெற்றன. மறையுரைகள் யாவும் புதிய கிறிஸ்தவ வாழ்வை (அன்பியம்) மையமாகக் கொண்டிருந்தன.

13ம் திகதி காலையில் அருட்தந்தை ஜேம்ஸ் பத்தநாதர் தலைமையில் பன்னிரண்டுக்கு மேற்பட்ட குருக்கள் இணைந்து திருப்பலி ஒப்புக் கொடுத்தனர்.

மாலையில் புனித பத்திமா அன்னையின் திருச்சுருபப்பவனி ஊர்மனையின் ஊடாக இடம்பெற்றது. மக்கள் வீதிகளை அலங்கரித்து பக்திசிரத்தையுடன் பவனியிற் கலந்துகொண்டனர். பெருந்தொகையான இந்துமத சகோதரர்களும் இதில் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது. அலங்கரிக்கப்பட்ட தேரில் அன்னை பவனிவந்த காட்சி அனைவரையும் கவர்ந்தது.

மாலை 7மணிக்கு இடம்பெற்ற வெள்ளிவிழா நிகழ்வுகளில் பெருந்தொகையான அருட்தந்தையர்கள், கன்னியர்கள், இறைமக்கள், பிறமத சகோதரர்கள் கலந்து கொண்டனர். சிறப்பாக புதுக்குடியிருப்பு பங்குத்தந்தையும், பங்குமக்களும் தங்கள் பங்கு ஈன்றெடுத்த முதற்பிள்ளை இரணைப்பாலைப் பங்கு என பெருமையுடன் வாழ்த்தினர். வெள்ளிவிழா மலரும் வெளியிடப்பட்டது.

தகவல்: செல்வி மல்றீனா
(மறையாசிரியர்)

## சின்னமடுத் திருவிழா

ஆவணி 5

வரலாற்றுப் புகழ்பெற்ற யாத்திரைத் தலமான சின்னமடு அன்னையின் திருவிழா 27.07.99 அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தினமும் ஆயத்த நவநாள் வழிபாடுகள் நடைபெறும். 04.08.99 அன்று நற்கருணை விழாவும், 5.8.99 அன்று காலை 7.00 மணிக்கு முதல் திருப்பலியும் அதனைத் தொடர்ந்து காலை 9.00 மணிக்கு ஆயர் தலைமையில் திருவிழா கூட்டுத் திருப்பலியும் நடைபெறும். மேலும் யாத்திரீகர்களின் நன்மைகருதி வழமைபோல் 4ம் திகதி தங்குவதற்கான பாதுகாப்பு ஒழுங்கும் மற்றும் அடிப்படை வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.

A/33/99

பங்குத்தந்தை.

## 45ம் நாள் நினைவஞ்சலி



அ. மேரி அன்சலா

தோற்றம் 07.04.1977
மறைவு 26.05.1999

'உயிர் உள்ளவரை எம்மை நேசித்தீர்
மரணத்திலும் உம்மை நாம் மறவோம்'

சிறகிழந்த பறவையெனத்
தந்தை திகைத்து நிற்க
பிள்ளை முகம் காணாமல்
தாய் கண்ணீர் சொரிய
தங்கையின் பிரிவைத் தாங்காமல்
அண்ணா அக்காமார் தவித்திட
சின்ன மகளின் முகத்தைக்
காணாது எம் குடும்பம் துடிக்க
எங்கள் கண்மணி அன்சலா
இவ்வுலகை விட்டே நீ
சென்று விட்டாய்.

இவரது ஆன்ம சாந்திக்காக 10.07.1999 சனிக்கிழமை காலை 8 மணிக்கு யாழ். புனித மரியாள் பேராலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. இவரது ஆன்மா நித்திய சாந்தி பெற இறைவனிடம் நிதமும் வேண்டுவோம்.


பிரிவின் துயரில்
தேவசித்தத்தை ஏற்கும்
அப்பா, அம்மா
அண்ணா, அக்காமார்
உற்றார், உறவினர்கள்.

மண்டைதீவு.

A/32/99

## 31ம் நாள் நினைவஞ்சலி

எம்முடன் உயிருடன் இருந்தவர்களை
மரணம் ஆட்கொண்டதும் மறவாதிருப்போமாக.



திரு. ஜோசப் மகேந்திரன்

மண்ணில் 21.09.1942
விண்ணில் 05.06.1999

அன்புத் தந்தையே இறைவா! இவ்வுலகில் உமது திருவுளப்படி வாழ்ந்து எம் அனைவரையும் ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்ட உமது அடியான் ஜோசப் மகேந்திரன் என்பவரது ஆன்மாவை உமது அன்புக் கரங்களிற் தாங்கி நித்திய இளைப்பாற்றியையும் முடிவில்லாத சமாதானத்தையும் அவருக்கு அளித்தருளுமாறு இறைஞ்சுகின்றோம்.

செபஸ்தியார் வீதி,
சில்லாலை.

A/29/99

இவரது பிரிவால் வாடிநிற்கும்:
மாமி, மைத்துனர், மைத்துனி,
பிள்ளைகள்.

## மானிப்பாய்ப் பங்கில் கோடியற்புதர் பெருவிழா

மானிப்பாயில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் புனித அந்தோனியாரின் பெருவிழா ஆனி மாதம் 20ஆம் திகதி யாழ் ஆயரின் கூட்டுத் திருப்பலியுடன் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. ஆயருடன் இணைந்து மானிப்பாய் மறைக்கோட்ட முதல்வர் அருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம், அருட்திரு மைக்கல் சவுந்தரநாயகம், அருட்திரு அன்ரனிப்பிள்ளை ஆகியோர் திருப்பலி நிறைவேற்றினர்.

ஆயர் தமது திருவுரையில் புனித அந்தோனியார் இறைவனின் வார்த்தையில் நம்பிக்கை கொண்டு அதைத் தியானித்து தமதாக்கிக் கொண்டவர். இவரிடம் ஆன்மவாஞ்சை அதிகமாகக் காணப்பட்டது. பல இடங்களுக்கும் சென்று நற்செய்தியை மக்களுக்கு எடுத்துரைத்து அவர்கள் இறை விசுவாசம் கொண்டு வாழ வழிவகுத்தார். தாழ்ச்சி, கீழ்ப்படிவு, கடினதவம் ஆகிய புண்ணியங்களில் சிறந்து விளங்கினார். இயேசுவை தமது வாழ்வின் மையமாகக் கொண்டு யேசுவில் நெருக்கமான அன்புகொண்ட அன்புச் சீடராக செபவாழ்வில் அவருடன் ஒன்றித்திருந்தார். இவரின் முன்மாதிரிகையை நாம் ஒவ்வொருவரும் எமது வாழ்வில் கடைப்பிடிக்க முயற்சிக்க வேண்டும்'' எனக் கூறினார்.

திருப்பலியைத் தொடர்ந்து புனிதரின் திருச் சுருபப் பவனி ஆலய முன்றலில் நடைபெற்றது.

தகவல் : A.S. நிஷாந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை நாயகியின் பொன்விழா

"லங்கா மாதா" என்னும் பெயரில் தேவதாய்க்கு வணக்கம் செலுத்த ஆரம்பித்த 50 வது ஆண்டு நிறைவும், இலங்கைநாயகி பேராலயத்தின் வெள்ளிவிழாவும் ஜுலை 23ம்திகதி தேவத்தை இலங்கை நாயகி பேராலயத்தில் கொண்டாடப்பட இருக்கின்றன. அத்துடன் 2000வது யூபிலியை யொட்டிய நற்கருணை மகாநாடும் அங்கு நடைபெறும். இதனை கொழும்பு மறை மாவட்டத்தின் திருவழிபாட்டு இயக்குநர் அருட்தந்தை சிசில் பெரேரா தெரிவித்துள்ளார்.

இரண்டாம் உலகப் போரின் அபாயத்திலிருந்து இலங்கை காப்பாற்றப்பட்டதன் காரணமாக மரியன்னைக்கு "இலங்கை நாயகி" என்னும் பெயரில் வணக்கம் செலுத்த திருத்தந்தையின்அங்கீகாரம் கிடைத்ததையடுத்து அவள் பெயரால் தேவத்தையில் ஒரு பேராலயத்தைக் கட்ட 49ம் ஆண்டு அடிக்கல் நாட்டப்பட்டது. 25 ஆண்டுகளின் பின் இவ்வாலயம் பூர்த்தியானது. ஆலயம் அபிஷேகம் செய்யப்பட்டபோது இலங்கை அதன் பாதுகாவலியான தேவதாய்க்கு நேர்ந்தளிக்கப்பட்டது.

மூன்று நிகழ்ச்சிகளையும் குறிக்கும் இப்பெருவிழா ஆகஸ்ட் 23ம் திகதி ஆரம்பித்து 29ம் திகதி முடிவடையும், இவ்விழாவின் விருதுவாக்கு "மரியன்னை மூலம் கிறிஸ்துவில் நீதியுள்ள மக்கள்" என்பதாகும்.

## வன்னிக்கான பாதையைத் திறக்கும்படி ஜனாதிபதிக்கு யாழ் ஆயர் கடிதம்.

வன்னி மக்களின் துன்பங்களை விளக்கி வன்னிக்கான பாதையைத் திறக்கும்படி யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்காவிற்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். அக்கடிதத்தை அப்படியே கீழே தருகிறோம்.

வன்னிக்கான சகல தொடர்புகளும் கடந்த மாதம் 15ம் திகதியிலிருந்து அறுபட்ட நிலையிலிருப்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பாதை திறக்கப்படாததால் ஏற்படும் மனித அவலங்கள் பல. உணவு தட்டுப்பாட்டால் உருவாக்கப்படும் பட்டினிச் சாவுகளை தடுக்க அரசு வன்னிக்கான பாதையை உடனடியாக திறக்க வேண்டும் என வினயமாக கேட்டுக்கொள்கிறேன். வன்னிப்பாதை மூடப்பட்டதனால் பல நோயாளிகள் உயர் சிகிச்சைக்காக அம்புலன்ஸ் வாகனத்தில் வவுனியா வைத்தியசாலைக்கு வர முடியாமல் இறப்பதையும் உங்கள் கவனத்திற்கு முன் வைக்கிறேன். இப்பாதை திறக்கப்படாததால் பொது மக்களின் பிரயாணம் தடைப்பட்டுள்ளதுடன் திரும்பிச் செல்ல முடியாது ஆயிரக்கணக்கான மக்கள் வவுனியா மன்னார் போன்ற இடங்களில் தங்கியுள்ளார்கள் என்பதையும் எடுத்துக் காட்ட விரும்புகிறேன். மாங்குளம் சோதனைச் சாவடியை யுத்த சூன்ய பிரதேசமாக அறிவிப்பதை வரவேற்கிறேன். இப்பிரதேசத்தில் எந்தவித இராணுவ செயற்பாடும் இடம் பெறுவதைத் தவிர்க்க வேண்டும். கடந்த காலங்களின் பாவனைக்கான பாதை திறப்பு இராணுவ நடவடிக்கைக்கு பயன்படுத்தப்பட்டுள்ளதால் தமிழர் விடுதலைப் புலிகளின் அச்சவுணர்வையும் விளங்கிக் கொள்ளவேண்டும். மேலும் பல நிபந்தனைகள் விதித்து பொதுமக்களின் பாவனைக்கான பாதை திறப்பை காலம் தாழ்த்தாது உடனடி பாவனைக்கு திறக்க சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளும்படி தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அருட். இ. விஜயரட்ணம் (2 பக்கத் தொடர்ச்சி)

தேடலுக்கு பதில் கொடுத்த உண்மைத் தியாகிகளுள் எம் தந்தையும் ஒருவர். அப்போஸ்தலரான புனித சின்னப்பரைப் போல் எதை எதையெல்லாம் தன் வார்த்தைகளால் கூறினாரோ அவற்றையெல்லாம் எம்மிடையே தன் வாழ்வாக்கினார். இதற்கு குருக்களும், கன்னியர்களும், குருமாணவர்களும் இறை மக்களும் கூட சாட்சிகள். "மனிதன் இருக்குமிடம் முக்கியமல்ல, மனிதனிடம் இருக்கும் மனமே முக்கியம்" என்பதை அவரைத் தேடிச்சென்ற ஒவ்வொருவருக்கும் தெளிவுபடுத்தி, அதிகம் பேசாது. கூறப்படுவதற்கு அதிகம் செவிமடுத்து ஆலோசனை வழங்கும் ஓர் "ஆன்மீக வழிகாட்டி, அத்துடன் ஓர் ஆற்றுப்படுத்துநர்.

செல்வாக்கும், அறிவும், ஆற்றலும் கொண்ட தந்தை, மற்றவர் முன் பெருமிதம் காட்டுபவர் அல்லர். மிகவும் எளிமையானவர், அமைதியானவர், ஆனால் பொய் குரலெழுப்பி பேசும்போது அவர் ஊமையாகி விடுவதில்லை. அடக்கம் உடையவர், ஆனால் நீதி பிணமாக்கப்படும்போது அவர் செயலற்று விடுபவரல்ல. தாழ்ச்சி மிக்கவர், ஆனால் உரிமைகள் மறுக்கப்படும்போது அவர் இடத்தைவிட்டு நழுவி விடுபவரல்லர். மாறாக அன்னை மரியின் வழித்துணையுடன் செபத்தின் மூலம் சக்தி பெற்று நேரிடுகின்ற சவால்களுக்கு முகம் கொடுத்து வெற்றி கண்டவர்.

அருட்திரு போல் நட்சேத்திரம் அ.ம.தி

## மிருசுவில் முன்பள்ளிப் பாடசாலை புதுப்பொலிவு

மிருசுவில், புனித நிக்கொலார் முன் பள்ளி, (பாலர் பாடசாலை) பங்குத்தந்தை அருட்திரு. எரிக் றொசான் அடிகளாரின் முயற்சியினால் தற்போது புதுப் பொலிவு பெற்றுள்ளது.

இப்பாடசாலைக்கென புதிய தளபாடங்கள், கற்பித்தல் உபகரணங்கள் என்பன புதிதாகப் பெறப்பட்டு மாணவர்கள் பயன்படுத்த வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் முன்பள்ளி இயங்கிவரும் புனித நிக்கொலார் பங்குமண்டபமும் சுற்றிவர அடைக்கப்பட்டு, மாணவர்கள் பாதுகாப்புடன் கல்வி கற்கக்கூடிய வகையில் பங்கு குருவினால் திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

மேலும், முன்பள்ளி மாணவர்களின் பெற்றோரை உள்ளடக்கியதான அபிவிருத்திக்குழுவொன்று அமைக்கப்பட்டு, மாணவர்களுக்கு மேலும் பல வசதிகளைச் செய்து கொடுப்பதற்கான நடவடிக்கைகள் பள்ளி பொறுப்பாசிரியை திருமதி. சகாயராணி யேசுதாசனின் உதவியுடன் பங்குக் குருவினால் எடுக்கப்பட்டுள்ளன.

தகவல்: F. X. கிறிஸ்ரிறஞ்சன், மிருசுவில்

## மகளிர் பயிற்சி நிறைவும், கண்காட்சியும்

மனித முன்னேற்ற நிலைய மனைப்பொருள் மகளிர் பயிற்சி நிறைவுக் கண்காட்சி இம்மாதம் 6, 7, 8ஆந் திகதிகளில் யாழ் மறைக் கல்வி நிலைய மண்டபத்தில் இயக்குனர் அருட்திரு சி. ஜி. ஜெயக்குமார் தலைமையில் ஆயர் தோமஸ் ஆண்டகை அவர்களால் சம்பிரதாயப் பூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டது. சர்வதேச கெயர் நிறுவனத்தின் திட்டப் பணிப்பாளர் திரு. எச். எ. அருள்ஞானம் அவர்களும் யாழ் கன்னியர் மட அதிபர் அருட்செல்வி யோலண்ட் அவர்களும் சிறப்பு விருந்தினராக வருகை தந்திருந்தனர். பயிற்சியாளர்களின் இனிய இறைபுகழ் கீதத்துடன் நிகழ்வு மலர்ந்தது. ஆயர் தமது உரையில் பயிலுனர்களின் கலைத்திறனைப் பாராட்டியதோடு, கற்றவைகளை மீளாய்வு செய்வதன் மூலம் எதிர்கால வாழ்வை வளப்படுத்திக் கொள்ளலாமென்று அறிவுரை வழங்கினார். இப்பயிற்சியில் கலந்துகொண்ட மாணவர்களுக்கு ஆயர் அவர்களால் சான்றிதழ் வழங்கப்பட்டது.

## போர்த்துக்கேய . . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அருட்தந்தை G. பிலேந்திரன் அவர்கள் வெளியிட்டுள்ள, 1. "Tamil Catholic Literary Tradition in Sri Lanka", 2. "Letters of the Holy Family missionaries from Jaffna 1862-1886", 3. "தமிழில் விவிலியம் நேற்றும் இன்றும்" என்னும் மூன்று நூல்களின் வெளியீட்டு விழாவின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் மேலும் தெரிவிக்கும் போது "யாழ்ப்பாணத்தில் புத்தக வெளியீடுகள் தாராளமாக இடம்பெறுகின்றன. அருட்தந்தை பிலேந்திரன் அவர்கள் யாழ் வளாகத்தில் பகுதிநேர விரிவுரையாளராக இருந்து இன்று நிரந்தர விரிவுரையாளராகப் பணியாற்றுகின்றார். அருட்தந்தை சந்திரகாந்தன், அன்ரன் மத்தாயஸ், பிலேந்திரன் இன்னும் மற்றைய அருட்தந்தையர்களின் பணி யாழ் பல்கலைக்கழகத்திற்கு கிடைத்திருப்பதையிட்டு பெருமகிழ்ச்சியடைகிறேன்" என்றார். இந்நூல் வெளியீடு அருட்கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களது தலைமையில் 1.7.99 அன்று யாழ் மறைக்கல்வி நிலையத்தில் நடைபெற்றது.

அருட்தந்தை யஸ்ரின் தமது தலைமையுரையில், ஆசிரியர் தமது ஆழ்ந்த ஆராய்ச்சியின் பயனாக இந்நூல்களை வெளியிட்டுள்ளார் என்றும், இந்நூல்கள் எமது மறையின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் என்றும், வரலாற்று ஆசிரியர்களான அருட்தந்தையர் பேர்ணியோவா, டொண் பீற்றர் ஆகியோரின் பணியை ஆசிரியர் தொடர்கிறார் என்றும் கூறினார்.

ஆசியுரை வழங்கிய யாழ் ஆயர் பேரருட்திரு தோமஸ் சவுந்தரநாயகம் அவர்கள், "வரலாறு ஒரு நல்ல ஆசிரியன். வாழ்க்கைக்கேற்ற பண்புகளை, மதிப்பீடுகளை கற்றுக்கொள்ள இது துணைபுரிகிறது. இவ்வேளையில் திருச்சபையின் வரலாற்றை ஆராய்ந்து இந்த நூல்களை வெளியிட்டமை தமிழுக்கும் மறைக்கும் ஆற்றுகின்ற ஒரு பணியாகும்" என்று கூறினார். மேலும் அவர் சுவாமி ஞானப்பிரகாசரின் பின் எவரும் கையிடாத திருச்சபை வரலாற்றுத்துறையில் ஆசிரியர் தாமே ஆய்வுகளை மேற்கொண்டு இந்நூல்களை வெளியிட்டமைக்குப் பாராட்டுத் தெரிவித்தார்.

தொடர்ந்து நூலை மதிப்புரை செய்த உயர்பட்ட ஆய்வுப்பீட பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ் தமக்கேயுரிய சுவாரசியமான நடையில் மதிப்புரையை நிகழ்த்தினார்.

இறுதியாக நூலாசிரியர் நன்றிகூறி நூல்களைப் பற்றிய சில் விளக்கங்களையும் தந்தார்.

## ஆலயத் திருவிழா

நவாலி புனித பேதுரு பாவுலு ஆலயத்திருவிழா கடந்த 20.06. 99 ஞாயிறன்று பிற்பகல் 5.00 மணிக்கு ஆரம்பமாகியது. பங்குத் தந்தை அருட்திரு. அ. ப. அன்ரனிப்பிள்ளை புனிதர்களின் கொடியை ஏற்றி வைத்தார்.

மனிதனும் புனிதனாகலாம் என்ற அடிப்படையில் ஒவ்வொரு மனிதனும் தான் நடந்து வந்த பாதையைத் திரும்பிப் பார்த்து மீண்டும் இறைவனிடம் இணைந்து கொள்ள இறை வார்த்தைகள் விழிப்புணர்வு ஊட்டின. 28.06.99 மாலை 5.00 மணிக்கு திவ்விய நற்கருணை ஆண்டவரின் எழுந்தேற்றமும், பவனியும் இடம்பெற்றன. 29.06. 99 காலை 7.30 மணிக்கு திருநாட் திருப்பலியை கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி அதிபர் அருட்திரு. ஜே. நீக்கிலஸ் தலைமைதாங்கி கூட்டுத் திருப்பலியாக ஏனைய அருட்தந்தையர்களுடன் நிறைவேற்றினார்.

திருப்பலியைத் தொடர்ந்து புனிதர்களின் பவனி இடம் பெற்றது. பவனியின்போது பக்தர்கள் மிகவும் பக்தியுடன் வழிபாடுகளில் கலந்து கொண்டனர்.

*செல்வி. தி. குருசுமுத்து*

## திருவுளச்சபையின் ஆன்மீகம் வாழப்படவேண்டும்

☆☆ திருவுளச் சபையின் முதல்வர் லொயிட் சாந்திக்குமார் அடிகள் ☆☆

திருவுளச் சபையின் இலங்கை முதல்வர் லொயிட் சாந்திக்குமார் அடிகள் சபையைப் பொறுப்பேற்ற பின் முதற்தடவையாக அண்மையில் யாழ் நகர் விஜயம் செய்தார். திருவுளச் சபையின் யாழ் மாவட்ட உறுப்பினர்களைச் சந்தித்து டண்ஸ்ரன் அடிகளாருடன் திருப்பலி நிறைவேற்றி, இளைய உறுப்பினர்களின் அர்ப்பணத்தைப் புதுப்பித்து வைத்தார்.

அருட்திரு லொயிட் சாந்திக்குமார் தமது மேற்படி விஜயத் தின்போது உறுப்பினர் மத்தியில் உரையாற்றுகையில் "சபையின் ஆன்மீகம் வாழப்பட வேண்டும். சபை உறுப்பினர்களால் ஆன்மீகம் வாழப்படும் போதே சபை பற்றிய விளக்கத்தை மற்றவர்கள் அறிய முடியும். அதுவே உலகியல் சார்ந்த சபையான இச்சபையை மற்றையோருக்கு அறிவிக்கும் சிறந்த வழியுமாகும்" என்றார்.

ஆசிரியர் அ. மருசலின் தலைமையில், சபையின் மூன்றாவது முதல்வராக பொறுப்பேற்ற சாந்திக்குமார் அடிகளுக்கு வரவேற்பு நிகழ்வு நடத்தப்பட்டது.

J. யோண்பிள்ளை
உசன் மிருசுவில்

## யாழ் மறைவட்ட. . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சங்கத்தில் பொதுநிலையினரின் முக்கியத்துவம் கருத்திலெடுக்கப்பட்டதை நினைவுபடுத்தி, பங்கேற்கும் திருச்சபை என்பதைப் பற்றிய விளக்கமொன்றை முன்வைத்தார். தொடர்ந்து உரையாற்றிய யாழ் ஆயர் திருச்சபையில் 99 வீதத்திற்கும் அதிகமானவர்கள் பொதுநிலையினர் என்பதை எடுத்து விளக்கி, இவ்வாறான நிலையில் திருச்சபையில் பொதுநிலையினரின் பங்களிப்பு எவ்வாறு அமைய வேண்டும் என்பது பற்றி விளக்கினார். மேலும் அவர் யாழ் மறைவட்ட மேய்ப்புப்பணி மாநாடு பற்றியும் அதில் எதிரொலித்த முன்னுரிமைப் பணிகள் பற்றியும் எடுத்துக்கூறி இவ்வாணைக்குழு இவற்றை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார்.

தொடர்ந்து ஆணைக்குழுவின் புதிய செயற்குழு உறுப்பினர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

உப தலைவர் : திரு.D. சூசைநாதர் (இளவாலை மறைக்கோட்டம்)
செயலாளர் : திரு.பெ.பிரான்சீஸ் (யாழ்ப்பாண மறைக்கோட்டம்)
பொருளாளர் : திரு. ம. யோண் (இளவாலை மறைக்கோட்டம்)
உப செயலாளர் : செல்வி.மேரி ரதிகா(யாழ்ப்பாண மறைக்கோட்டம்)
உபபொருளாளர் : திரு. கீதபொன்கலன் (இளவாலைமறைக்கோட்டம்)

தகவல்: பெ. பிரான்சீஸ்
(செயலாளர்).

## யாழ். புனித மரியாள் வித்தி யாலய அதிபர் ஓய்வுபெறுகிறார்

கடந்த 26 ஆண்டுகள் புனித மரியாள் வித்தியாலயத்தில் ஆசிரியராகவும் அதிபராக வும் பணியாற்றிய திரு. சிங்கராயர் தார்சீசியஸ் (S.L.P.S.I.) அண்மையில் தம் அதிபர் பதவியில் இருந்து ஓய்வுபெற்றுள்ளார். கல்விச்சேவையில் 40 ஆண்டுகளை நிறைவுசெய்து தமது 60வது அகவையில் ஓய்வு பெறும் திரு. S. தார்சீசியஸ் அவர்களுக்கு பாடசாலை மாணவர் ஆசிரியர்களால் பிரிவுபசாரம் நடத்தப்பட்டது.

புதிய அதிபராகக் கடந்த கால உப அதிபரான திரு. எம். செபஸ்தியாம்பிள்ளை நியமிக்கப்பட்டுள்ளார்.

வீட்டுக்கொரு பாதுகாவலன் விசுவாசத்தின் பாதுகாவலன்

noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம், பிரதானவீதி 360 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் ஒவ்செற் முறையில் 1999ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது P 197